



அமரர்

# பஞ்சாட்சரம் மௌதீஸ்வரன்

அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவுமலர்

17.11.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெற்புலவு, பூநகரியைப் பிறப்பிடமாகவும்,
வேரவில் பூநகரியை, வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# பஞ்சாட்சரம் மௌதீஸ்வரன்

அவர்களின்

# நினைவு மலர்


2024.11.17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்பு நிறைந்த குடும்பத் தலைவன்



வையகம்
02
06
1979

வானகம்
18
10
2024

அமரர்

# பஞ்சாட்சரம் மௌதீஸ்வரன்

திதி நிர்ணய வெண்பா

குரோதி வருடமதில் ஐப்பசி வெள்ளிஒன்றில்
பூண்ட திதி அமரபக்க துதிகையில்
நீண்ட புகள் பஞ்சாட்சரம் மௌதீஸ்வரன் எனும்
புண்யவான் நிமலர்பாதம் ஏற்றநாளாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பது போல்
அறிவின் உருவாய் சோராத உடலும் துணிந்த மனமும்,
பொறுமையும், புன்சிரிப்பும் பூண்டு பாசமும், பண்பும் நெசி
செங்கும் பரந்த தூய மனதுடன், நல்வழிகாட்டி எம்மை
இவ்வுலகில் வாழ வைத்து எமக்கு பெரும் விருட்சமாக இருந்த
எங்கள் அன்புத் தெய்வத்திற்கு கண்ணீர்ப் பூக்களை
சமர்ப்பிக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் துதி

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்



அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

நானேயோ தவம்செய்தேன்சிவாயநம எனப்பெற்றென்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வேறுத்திடவே

## திருவிசைப்பா

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கணான் மறைநூல் சகலமும் கற்றோர்.
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கள்நா யகனே போற்றி ஏழ் இருக்கை
இறைவனே! போற்றியே போற்றி

## திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்றும் முற்றும்
எமக்கமுதமாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகழ் தாண்டு கொண்டாருயிர் மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே என்று
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆலமே அமுதம் ஆக உண்டு வானவர்க்கு அளித்துக்
காலனை மார்க் கண்டார்க்காக் காய்ந்தனை அடியேற்கு இன்று
ஞாலம்நின் புகழே ஆக வேண்டும் நான் மறைகள் ஏத்தும்
சீலமே ஆலவாயில் சிவபெரு மானே என்றார்.

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாட
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகு தொகு
சித்ரப்பவு ரிக்குத் திரிகடக எனவொதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# பஞ்சாட்சரம் மௌதீஸ்வரன்

## *அவர்களின்*

## வரலாற்றுச் சரிதை

இந்து சமுத்திரத்தின் முத்து எனத் திகழும் இலங்கைத்திருநாட்டில் நீர் வளமும், நிலவளமும் சிறப்பாக அமைந்த கிளிநொச்சி மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க பூர்வீகக் குடிகள் பலற்றைக் கொண்டதுமான இடமே பூநகரிப்பிரதேசம்

இங்கு கர்ப்பகதருக்கள் கம்பீரமாய் வானுயர்ந்து கவிபாடிட கடலலைகள் தாலாட்டு இசைத்திட நெற்பயிர்கள் புலவு புலவாய் நெல் மணிகள் தலைவணங்க நிலக் கடலை நிறைந்த வருமானமாக ஆலம் விழுதுகள் அசைந்தாடும் ஆலங்குளப்பிள்ளையார் அருள் சுரக்க அமைந்ததுவே நெற்புலவுக்கிராமம்

இங்கு பஞ்சாட்சரம் மல்லிகாதேவியில் இனிதே கொண்ட காதலினால் 1975ஆம் ஆண்டு பெற்றவர் உற்றார் விருப்புடனே இருகரம் பற்றி இல்லற வாழ்க்கையினை ஆரம்பித்தனர்.

மற்றோர்கள் வியப்படையும் அளவிற்கு பஞ்சு, மல்லிகா இருவரும் இன்பமுடன் இல்லறத்தில் இணைந்த பலனாய் மூத்த மகன் அமரர் சதீஸ் என்பவரை 1977 பெற்றெடுத்தனர். இல்லறச் சிறப்புப் போல் உயர்வான உளைப்பாளி பஞ்சு எந்த நேரமும் வீனாக்காது முழுநேர விவசாயியாக தனது குடும்பத்தின் வருமாணத்தை உயர்த்தி நிற்க அவருக்குத் துணையாக நல்லாள் மல்லிகா எல்லோராலும் ராசாத்தி என செல்லமாய் அழைக்கப்பட்டார், உண்மையில் ராசாத்தியாகவே வாழ்ந்த காலத்தில் இரண்டாவது முத்தாக 1979இல் பெற்றெடுத்தனர் மௌதீஸ்வரனை இவனுக்கு இணையாக அடுத்து சுபதீஸ்வரனும் பிறந்திடவே மட்டற்ற மகிழ்ச்சி அடைந்த பஞ்சுவிற்கு ஓர் சிறிய கவலை என்னவென்றால் எல்லாம் ஆண் பிள்ளைகள் ஓர் பெண்பிள்ளை வேணும் என தனது குலதெய்வமான வில்லடியில் அமைந்திருக்கும் சாங்குபிட்டி ஐயனாரை வேண்டிடவே அவரது அருளால் கொவ்வைப் பழம் போன்ற உதட்டுடன் கொள்ளை அழகுடைய அம்மன் திரு உருவம் போன்ற மகள் பாமாவும் பிறந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்போர் கண்படும் அளவுக்கு வசதிவாய்ப்புடன் வாழ்ந்த பஞ்சு மல்லிகாவிற்கு அடுத்து அமரர் யுகந்தன், தனு, டினேஸ் என மூன்று ஆண் மகனும் அவதரிக்க அவனுக்கு என்ன குறை எல்லாம் ஆண்பிள்ளை என்று பேசுவோர் ஒரு புறம் தமது செந்த முயற்சியினால் சொகுசான வாழ்கை வாழ்ந்த காலத்தில் நாட்டின் சூழ் நிலை காரணமாக இடம் பெயர்ந்து வன்னேரிக் கிராமத்தில் வாழ்தகாலத்திலும் தனது தொழிலை கைவிடாது செவ்வனவே செய்து வந்தார்.

அடுத்தவர் உழைப்பில் வாழக்கூடாது என அடிக்கடி சொல்லிவரும் பஞ்சுவிற்கு தீராத நோய்வந்து சூழவே மனம் வருந்தி நின்ற வேளையில் தனது மூத்த மகன் திருமணத்தின் பின் நோய் பலமாக தாக்கிடவே மரணமுற்றார்.

தந்தையின் மரணத்தின் பின் தாயின் அரவணைப்பில் மீண்டெழுந்த பிள்ளைகளில் இரண்டாவது மகனான மௌதீஸ்வரன் பள்ளிப்பருவமதில் நட்புக் கொள்வதிலும் ஒவ்வொரு கற்றல் துறைகளிலும் நாட்டமுடையவனாகவும், ஆசிரியரை மதிப்பதில் எல்லா மாணவருக்கும் எடுத்துக் காட்டாக திகழ்பவனாகவும். தனது பாடசாலைப் படிப்பினை மட்டுவில் நாடு அ.த.க பாடசாலை தொடக்கம் மத்திய கல்லூரி இடப்பெயர்வின் பின் வன்னேரி ம/வி என தனது கல்விப்பயணத்தைத் தொடர்ந்த மௌதீஸ் சிறந்த மாணவனாகவும் ஆசிரியர் விருப்பத்தக்கவனாகவும், சாரணர் பயிற்சிப் பாசறையின் சிறந்த அனித்தலைவனாகவும் விழங்கியதுடன் விளையாட்டில் கோட்டம் மட்டம், மகாகணமட்டமென இவரது சுவடுபடாத மைதானம் இல்லை என சொல்லும் அளவுக்கு விளையாடியவன்

இதன்பின் நாட்டு பணிக்காக சிலகாலம் பணியாற்றி பலதரப்பட்டவர்களின் மனங்களில் இடம் பிடித்த இருதயன் எனும் இனிய பெயருடன் உலாவியவன். புலனறிந்து செயற்பட்டு இரகசியம் காப்பதில் இவனுக்கு நிகராக எவரும் இல்லை என கூறும் அளவிற்கு தனது சேவையை செய்ததுடன், தனது குடும்பப் பொறுப்புக்களை தன்னகத்தே சுமந்து தனது தாயின் தேவை அறிந்து சகோதரரையும் நல் வழிப்படுத்தி உழைப்பை உரமாக்கி அள்ளிக் கொடுத்த கொடை வள்ளலுமாவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சகோதரியின் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்வதிலும் ஆர்வம் காட்டியவன் இவ்வாறான காலகட்டத்தில் பூநகரி பிரதேசத்தில் அமைந்ததுவே

பொன்னிறமுடைய பசுக்கள் வயல் வெளியில் புல்லுண்டு அதில் சுரக்கும் பால் குடம் குடமாகப் பொங்கிடவே அதுமட்டுமன்றி நெற்பயிர்கள் பொன்னிறக் கதிர்களை வீசி பொன் பொருள் ஈட்டித் தரும் வயல் வெளிகளையும் மதுரையை எரித்த கண்ணகிதாய் பிரம்பு சிலம்புடன் காட்சிகொடுத்தருளிய பொன்னா வெள்ளிக் கிராமத்தில் வாழ்ந்த சைவமும் தமிழும் தளைத்தோங்கும் பண்பாடு மிக்க வந்தோரை வரவேற்று உபசரித்து உணவழிக்கும் கொடை வள்ளல் வம்சா வழியாகக் கொண்ட சிஸ்ரீதரன் தனது கட்டிளமை பருவத்தில் உத்திராதேவி மீது கொண்ட காதலினால் கரம் பிடிக்க மலர்ந்த மலர்களாக வரதன், ரகு, வினிதா, சபிதா, கஜிதா, கஜன் ஆகிய பிள்ளைகளைப் பெற்று கல்வியிலும், விளையாட்டிலும் நல் ஒழுக்கத்திலும் சிறந்த முத்துக்களாக வாழ்ந்த காலத்தில் பெண்பிள்ளைகளில் மூத்தவளான வினிதாவை மௌதீஸ் கண்ணுற்றான் இவளின் கருங்கூந்தல் அழகு, கண் இமை வில் போன்ற வளைவுடையவள் கண்ணியமான பேச்சிலும் மயக்கமுற்று காதல் கொண்டான்.

இதன் பேறாக தனது தாயிடம் கூறி பெறுமதிமாய் கொண்டாடி நாட்பார்த்து ஊர் கூடி நல்ல நாளதிலே 2005 மாசி 05இல் பொற்தாலி பூட்டி பொட்டுடன் மலர் மாலை சூடி பெண்ணவளை கூட்டிச் சென்றார்.

இருவரும் பாலும் பழமும் போல பாசம்மாய் வாழ்ததினால் மூத்த முத்தாக 2005இல் திருசாவை பெற்றெடுத்து குதுகலித்துக் கொண்டாடினர்

பேரப்பிள்ளையைக் கண்ட பேரன் பேத்தியரும் தாலாட்டு நிதம் பாடி தங்கத் தொட்டிலிலே தூங்க வைத்து அகமகிழ்ந்தனரே அது மட்டுமின்றி அக்கா மகள் என சித்தி மாரும் முறை மாமன் நான் என மாமன் மாரும் முத்தமிட்டு வளர்ந்த கதை சொல்லில் அடங்காது.

மௌதியும் வினிதாவும் தனிக்குடி போக என்று உளம் கொண்டு எல்லாள மன்னன் காலத்தில் ஈழவூர் என அழைக்கப்பட்ட வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகர் அருள் சுரக்கும் வேரவில்லில் காணி ஒன்றினை வேண்டி வீடமைத்து கலகல என வாழ்ந்த காலத்தில் 2008இல் இரண்டாவது குழந்தையாக ஆண் மகன் துசி அவதரித்திடவே மனம் மகிழ்ந்து மௌதியும், வினிதாவும் பலகதை பேசி மகிழ்ந்தனவே

நாட்டின் சூழ்நிலையால் இடம் பெயர்ந்து மீண்டும் தமது சொந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் மீள்குடியேறி உல்லாசமாய் வாழ்ந்த காலத்தில் ஊருக்கு வருபவர்களெல்லாம் லாபநோக்கம் பாராது சமையலில் சலிபடையாது சமைத்து பாசல் கட்டி அதனை விற்று வருமாணத்தை ஈட்டி வாழ்ந்த காலத்தில் மூன்றாவது குழந்தையாக கள்ளம் கபடமற்ற கவர்ச்சியுடைய பிள்ளாயக அவதரித்த சயனியும் பிறந்திட்டாள்.

நாளுக்கு நாள் பிள்ளைகளின் வளர்ச்சிகண்டு பெருமதிம் கொண்டார். அக்கறையுடன் குடும்பச் சுமைகளை தாங்கி இருவரும் தமது காணியில் இரட்டிப்பாக எண்ணி காணியில் ஓர் பலசரக்குக் கடையினை திறந்து அதற்கு துசி பல்பொருள் வாணிபம் என பெயருமிட்டு வர்த்தக நடவடிக்கையில் மேலோங்கி நின்றனர்.

ஊர் கண்கள் திரும்பிப்பார்க்கும் அளவிற்கு மனைவி பிள்ளைகள் கடையை நிர்வகிக்க எனக்கு என்ன குறை என கூறியபடி கடைவாசலில் கதிரை போட்டு வருபவருடன் சகசமாயப் பேசும் மௌதியின் தோற்றம் தற்போதும் கடையடியில் அமர்ந்திருப்பது போன்ற பிரமை கண்முன்னே.

ஊரை நோக்குமிடத்தில் ஊரில் உள்ளவர் அனைவருக்கும் வாயில் முனு முனுப்பது உன் பெயர்தான் பாடசாலையின் அபிவிருத்திக்குழு செயலாளராகவும் சில காலம் உன் பணி காணப்பட்டது. அது மட்டும் அன்றி தற்போதும் இங்கு இயங்கி வரும் விளையாட்டுக்கழக வீரர்கள் தாம் வேறு அணியுடன் போட்டி போடப்போகும் போது மௌதீசின் கடை முன் தாம் செல்லும் பேரூந்தை நிறுத்தி இப் பொருமகனை வாரி அழைத்து ஏற்றிச் செல்வதும் சொல்லிவிட முடியாது. இவரை ஏன் கூட்டிச் செல்கின்றீர்கள் என வினாவும் போது விளையாட்டு வீரர்கள் கூறிய பதில் மௌதீஸ் அண்ணா மைதானத்தில் அமர்ந்தால் அன்று எமக்குத்தான் வெற்றி இதனால் தான் இந்த சுதிஸ்ரக்காரனை விடாது அழைத்துச் செல்கின்றோம் என கூறி விடுவார்கள்.

இவ்வூரில் நிரந்தர உணவகம் எதுவும் இல்லா வேளையில் இருந்து இன்றுவரை வருகின்ற உத்தியோகஸ்தர் சாரதிகள், நண்பர்கள் எவரையும் விட்டு வைக்காது அழைத்து வந்து கட்டாயப்படுத்தி உணவருந்த வைப்பது இவரது சிறந்த பழக்கம் . இவ்வாறு உணவருந்த வைப்பதனால். தன் பசி தீர்ப்பது போன்ற ஆனந்தம். இவரது உள்ளத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைவாசலில் உள்ள மரத்தில் வட்டக்குடில் அமைத்து அதன் கீழ்ச் செய்வோரை தன்வசப்படுத்தி கதைத்து மகிழ்வதில் மௌதீசுக்கு மட்டற்ற மகிழ்ச்சி

அயலில் உள்ள அனைவருக்கும் பல அறிவுரை கூறி அன்பாக அணைத்துக் கொள்ளும் இவனது உள்ளத்தை இந்த ஊரில் எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது.

மனைவியின் வம்சாவளி கோயிலான சம்புமோட்டை ஐயனாரில் நம்பிக்கை மேல் நம்பிக்கையுடன் வழிபாடு மேற் கொள்வான்

கோயில் பொங்கல் காலத்தில் தேவையானவற்றை அன்பளிப்பாக கொடுப்பது இவர்களது குடும்ப வழக்கம்.

இவ்வாறு வாழ்ந்த மௌதீசுக்கு திடீர் என நீரிழிவு நோய் வந்து விட்டதாக வைத்தியர் கூறிய போது சாரும் கலங்காது கம்பீரமாக வைத்திய சாலைகளைத் தேடிச் சென்று வைத்தியம் பல பார்த்தான் அப்போது தனது பிள்ளைகளிடையே அடிக்கடி கூறுவது உங்களுக்கு இந்த கடை வருமாணம் காணும் நான் இல்லாது போனாலும் இதை வைத்து வாழுங்கள் என அடிக்கடி கூறுவது வழமை

சில மாதங்களுக்கு முன் வந்த நோய் கூடுதலாகப் பாதித்திட தங்கையின் வேண்டதலுடன் அவரின் வீட்டில் தங்கி தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்தார் இவரது சுகநலத்தை அறிந்த உறவினர் அவரின் வீட்டுக்கு வருகை தந்து பார்க்கும் போது மட்டற்ற மகிழ்ச்சியில் அவருடன் உறவாடி மகிழ்ந்தார்

தனது நோய் தீர வேண்டி இறை நம்பிக்கையுடனும் உணவுக் கட்டுப்பாட்டிடனும் இருந்த இவர் தனது குல தெய்வ வழிபாட்டையும் மறந்துவிடவில்லை.

இவரது பிள்ளைகள் A/L, O/L, தரம் 5 என பாடசாலையில் சிறந்த மாணவரகாவும் மாணவைத்தலைவராகவும் திகழ்வதை எண்ணி என்றும் பூரிப்புடன் வாழ்ந்த மௌதீஸ் கடந்த 12.10.24 அன்று தனது மோட்டார் சைக்கிலில் முழங்காவில் சந்தையில் தனது கடைக்கு பொருட்கள் வாங்கச் சென்ற வேளையில் திடீர் என எதிர்பாராத விபத்தில் காயமடைந்து முழங்காவில் வைத்தியசாலை மூலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றம் பெற்று மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்தபோது சிகிச்சைபயனின்றி 18.10.2024 வெள்ளிக்கிழமை மௌதீஸ் இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்

மங்கைப் பருவமெய்தி
மலர் சூடி மகிழ்ந்த காலம்
மனம் நெகிழ்ந்து காதலுற்றேன்
மன்னவனே உன் மீது

மாலை இட்ட நாள் முதலாய்
மகிழ்வாக வாழ்நதோமையா
என்னை கரம்பிடித்த நாள்த் தொடக்கம்
முகம் சுழித்து நான் அறியேன்

எடி என்ற சொல் கூட
என் மீது ஏசவில்லை
படுபாவியாய் நான் இன்று
பதறுகிறேன் உமை நினைத்து

அப்பா எங்கே அம்மா என
அழுகின்ற பிள்ளைகளை
தேற்ற நாதியின்றி
தேம்பி அழுகின்றேன்

கடை முன் குடிலதினில்
கதை சொல்லும் முகம் காண
காத்திருந்தேன் கடையதனில்
கண் குழமாக பொங்குதையா

இத்தடை மீதெனக்கு
இனி மகிழ்வெங்கோ
ஒரு முறை நீ வந்து
பேசிவிட்டுப் போவீரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தமெல்லாம் கலங்கி
சிறகொடித்து நிற்கிறேன்
பாவி எனை தவிக்கவிட்டு
பல்லக்கில் போனீரே

எப்போது உன் முகத்தை
எங்கு நான் காண்பதையா.....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் வேதனைக்குரல்

பேரூந்தால் இறங்கிடவே
பெரும் தவிப்புடன்
ஓடி வந்து - ஏற்றிடுவாய்
புழுக்கடி எங்கே பணம் கிழங்கெங்கே - என
பொன்னான வாய் திறந்து
பூரிப்பாய் மொழி பகிர்வாய்

கண்டவுடனே கறி வேண்டி
கட கடனெ சமையென்று
சமையல் முடிந்ததுவோ
சாப்பாட்டைப் போடன்றும்
சகசமாய் கதை பேசும் உன் குரலை
ஊரெல்லாம் தேடினேனே
ஒரு போதும் கேக்கல்லையோ

ஒன்றோ இரண்டோ மூன்றோ பாவி நான்
உத்தமரைப் பரிக்கொடுத்தேன்
பத்து மாதம் சுமந்து
பாரினிலே பெற்றவள் நான்
பாவியாய் நிற்கிறேனே

பதறுது நெஞ்சமையா
எப்பிறப்பில் நீங்கள் எல்லாம்
என்னிடம் வருவீர் என்று
ஏங்குதடா என் மனது
தந்தையின் உடலமைப்போ
தள தளவென்ற உன் தேகம்
வெந்தணலில் வெந்ததெண்ணி
வெம்பி நான் அழுகின்றேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் புலம்பல்

அப்பா எங்கே என்று
அழுது புலம்பினோமே
சொல்லாது போனீர்களே
துடிக்கிறது நெஞ்சமப்பா
அள்ளி அணைத்திடுவீர்
அன்பு பல காட்டிடுவீர்கள்

சொல்லிவிட முடியாது
சோகமது ஆறாது
அற்புதங்கள் காட்டி - எமக்கு
அறிவு பல கூறினீங்கள்

வாரம் தோறும் பல கதைகள்
வரிசையாய்ச் சொன்னீர்கள்
வாழ்ந்து தான் காட்டுங்கள் என்று
வையகத்தில் விட்டீர்களோ
தேடுகிறோம் உம் முகத்தை

தேசமெல்லாம் காணல்லையே
அழவிட்டுச் சென்றீரோ
அப்பாவே வந்திடுங்கள்
சொர்க்கம் தான் உம்மடி என்று

செங்சாக நாமிருந்தோம் - உம்
பங்கத்தில் படுத்துறங்கிய
பல ராத்திரிகள் இனி வருமோ
கண்முண்ணே நிற்பது போல்
கனவு பல வருகுதப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணமெல்லாம் வாட்டுதப்பா
எங்கு நீங்கள் போனீரோ
உண்ணவும் முடியவில்லை
உறங்கமும் வருகுதில்லை
உங்கள் நினைவு வந்து
உள்ளத்தை வாட்டுதப்பா

## அப்பம்மா புலம்பல்

பேரன் பேரன் என்று - என் மகள்
பெற்ற பிள்ளை நீ - என்
அருகிருந்து பகிடிக்கதை
ஆற்பரித்துக் கூறிடுவாய்
அப்பம்மா என்று நீ
அன்பாக அழைத்திடுவாய்
தப்பென்ன செய்தோமே - உன்னை
தவறவிட்டு அழுகிறோமே
ஜெயமதர்மராஜா உனை
ஏன் அழைத்தான் - பூமிவிட்டு
தெரியாது புலம்புகிறேன்
தேற்றிட வந்திடுவாயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமா, மாமி புலம்பல்

முன் பிறந்த மருமகனாய்
முழுமதியாய் நீ இருந்தாய்
மாமா மாமி என
மனதிலே மதித்தவனே

பிள்ளைக்கு நிகரான
பெருமகனாய் திகழ்ந்திரே
வேற்றுமை காட்டாது
ஆற்றுதல்ப் படுத்துவீர்
அல்லும் பகலும்
உம் முகம் காண
அழுது புலம்புகிறோம்.

கொடையில் கர்னனாக
கொண்ட குணம் உம்மிடத்தே
வாண்மெய்யில் அரிச்சந்திர
வடிவமுடைய மருமகனே

இறுதிவரை மருத்துவ மனைதனிலே
உமை எண்ணி வருந்தினேனே
துன்பமான செய்தி ஒன்று
துடிக்க துடிக்க வைத்ததுவே
தேடுகிறேன் மருமகனெ - உமை
எப்பிறப்பில் காண்பதென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கை பாமா புலம்பல்

சின்னண்ணா சின்னண்ணா - என்று
சிரித்தபடி நான் அழைத்தால்
உன் முகம் மலர்ந்து - என் முன்னே
உருகிடுவாய் மனம் மகிழ்ந்து
நோயுற்று நீயிருக்க
நொந்து மனம் வாடினேனே

வைத்தியசாலையில் பார்த்தவுடன்
பைத்தியமானது எந்தனுள்ளம்
நோயினை குணமாக்க எண்ணியே
நோக்கமாய் உனை அழைத்து
பார்த்தேனே வைத்தியம்

பதுறு நெஞ்சமது
சுகமாக இருந்ததை எண்ணி நான்
அக மகிழ்ந்து கொண்டேனே
இடியாக வந்தண்ணா - நீ
விபத்தில் மாட்டியது
விறு விறு என்று ஓடிவந்து - உனைப்பார்த்து
விரைத்துப் போனது எந்தனுள்ளம்
உயிர் போனது என்று அறிந்தவுடன்
உழறுகிறேன் உன் நினைவில் நான் இங்கு
இதயமது வெடிக்குதண்ணா - நீ
எப்போ வருவாய் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிமார் வேதனைக்குமரல்

தந்தைக்கு நிகரான அண்ணா - நீ
தவிக்கிறோமே உன் நினைவில்
பந்த பாசங்கள் ஒன்று சேர்ந்தால்
பலருடனும் சேர்ந்து நீ
பாசத்துடன் பல கதைகள்
பணிவாக பகிர்ந்திடுவாய்
வாழ் நாளில் ஒரு நாளும் - நீ
வஞ்சனை நினைத்ததில்லை
வாடா என்று கூட
அதட்டி நீர் அழைத்தில்லை
தண்டித்து கதைத்ததில்லை
தவிக்கிறோமே உனை நினைத்து
பொல்லாத யமனவனே
புரியாது உனை அழைத்தான்
சொல்லாமல் போனதெங்கோ
துயரத்தில் வாடுகின்றோம்
ஆறுது இல்லை அண்ணா
ஆற்றுவோர் பலரிருந்தும்
அடியோடு சாய்ந்ததென்று
அவச் செய்தி கேட்டவுடன்
துடி துடித்துப் போனோமே - உன்
துயரமான செய்தி கேட்டு
எங்குப் பார்த்தாலும்
எதிலும் உன் முகந்தான்
மெய் என்று ஓடினோமே
பொய் என்று புரிந்து கொண்டோம்
மெய் உலகில் உனை - என்று நாம்
நியமாகப் பார்ப்பதண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துணர் புலம்பல்

மச்சான் என்று பல
மரியாதை தந்தவனே
மனதில் உள்ளவற்றை
மறைக்காது கூறிடுவாய்
புதிர் புதிராய் கதை பேசி
புகழாரம் சூட்டிடுவாய்
புன்னகையால் எமை எல்லாம்
பூரிக்க வைத்தவனே
கூடி இருந்து உணவுண்டு
குதுகலித்த நாள் வருமோ
நாடி வந்து குடித்த நாட்கள்
நாம் என்றும் மறக்கலாமோ
வருந்தி அழைக்கிறோமே
வந்து விடு ஒரு முறை நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துணிமார் புலம்பல்

அத்தான் என்று அழைத்தில்லை - ஏன் என்றால்
அண்ணன் குணம் உம்மிடத்தே
அர்த்தமுடன் நாம் அழைக்க
அழகாய் புன்சிப்பீர்
வந்தவுடன் வரவேற்று
வசந்தமாய் கதை பேசும்
இன் முகத்தை காணாது
இருள் சூழ்ந்து போனதுவோ

நடந்த விபத்தை அறிந்துமே
நாடி வந்தோம் உனைப்பார்க்க
பேச்சு மூச்சின்றி
பெருமரம் சாய்ந்ததுபோல்
பிணமாக கிடந்தீரே - எம்மோடு
பேசுவதற்கு ஏதுமில்லையோ
அருகில் நின்றபடி

அண்ணா அண்ணா என்று
அலறியே கூச்சலிட்டோம்.
அதுகூடக் கேக்கல்லையோ
சொர்க்கம் அதுவென்று
சொல்லாமல் போனீரோ...
ஏங்குது மனங்கள் - இங்கு
எப்போது காண்பதென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியப்பா, பெரியம்மா, மாமா,
## அத்தை, சித்தி, சித்தப்பா புலம்பல்

குலவிளக்காய் நீ இருந்து
குதுகலிக்கும் காலமதில்
அகமுறைய எமை விட்டு
அகண்டு நீ போனதெங்கோ

அலை கடலில் துரும்பாகி
அலைகிறோம் உனை நினைத்து
அவணியிலே எம்மவற்கு
ஆறுதில்லை நெஞ்சமது

பழகிய நாட்கள் எல்லாம்
பாழாகிப் போனதுவோ
பதறுகிறோம் பாவியராய் - உம்
முகம் பார்க்க நாம் இன்று

மாற்றான் வஞ்சித்து
உனை அழைத்தானே
மாறுதில்லை உண்
நினைவே நெஞ்சதினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறவா சகோதரர்

உடன் பிறப்புப் போலவே
உள்ளமதில் எமை எண்ணி
நடந்திடுவீர் எமை எல்லாம்
நற்பண்புடையவனே
வந்துவிட்டால் உம் வாசல்
வரவேற்று உபசரிப்பீர் என்ன
எனக்கு கொண்டுவந்தாய் - என
ஏற்புடனே கேட்டிடுவீர்
எல்லாம் அறிந்தவனாய்
எம்மோடு உரைபகிர்வீர்
வஞ்சனை இல்லாத உன் முகமதிலே
வசந்த நிலா பொலிவிருக்கும்
பிரித்துக் கூடப் பார்க்காத
பிறவிக் குணமுமக்கு
ஏற்றத் தாழ்வின்றி - எம்மை
ஏமாற்றும் மனமின்றி
உத்தமனே உன் நினைவை
உள்ளமது மறக்குமோ
மற்றவர் போல் நீ இல்லை
மனம் வலிக்குதையா
மாயவன்
உனை அழைத்தானே
மனமே உருகுதையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள் புலம்பல்

அப்பா போன்றே இன்னொரு அப்பா என்று
அழகாக நம்பியிருந்தோம்
தப்பாக இறைவனுமோ
தவிக்கவிட்டான் - எமை
தரணியிலே தேடுகிறோம்
தந்தை உமை காணவில்லையே

கசப்பான செய்தியது
காதுக்கு வந்ததுவே
கலங்கினோமே மனம் நொந்து
கதியற்று நிற்கிறோமே
எப்போது உங்கள் குரல்
எங்கள் காதில் கேட்பது
என்று ஏங்கி நாம் தவிக்கிறோமே
ஏது மற்று நிற்கிறோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் வேதனைக்குரல்

மாமா மாமா என்று
மனம் நிறைய குதுகலித்தோம்
மாண்டு போன செய்திகேட்டு
மனம் நொந்து வாட்டமுற்றோம்
தேம்பி தேம்பி அழுகிறோமோ
தேடி உமை பார்க்கிறோமே
உளம் சலித்துக் காத்திருந்தோம்
உம் முகத்தை பார்ப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரார் புலம்பல்

ஊரார் என்று கூட - நீ
உன் மனதில் எமை நினைத்தில்லை
உற்றார் போலவே - எமை
உள்ளத்தில் நினைத்தவன் நீ
சுற்றி இருந்துமே - நாமெல்லாம்
சுந்தரமாய் கதை பேசியதெல்லாம்
அற்றுப் போனதுவோ - எங்கள்
அவல நிலையிதுவோ
உன் பெயர் சொன்னால்
ஊரெல்லாம் கூடி நிற்கும்
மதிப்புமிகு மாமனிதா
மாய்ந்து போனதுவோ
மனதளவில் நினைக்கவில்லை
மாண்டு நீ போவாய் என்று
மனம் ஏற்க மறுக்கின்றது - நீ
மரணித்த செய்தியினை
மரணித்த செய்தியது
பொய்யாகி போகாதோ - என
பெருமிதமாய் காத்திருந்தோம்
பெருமிடியாய் இடித்ததுவே
உன் உடலைக் காணவென
ஓடி வந்தோம் வீடு தேடி
ஓய்ந்த உன் உடலைக்கண்டு
ஒப்பாரி வைத்தோமையா
மனம் வலித்து நிற்கிறோமே
மறுபடியும் வருவீரோ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிலும் பிறவி சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க !
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க !
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க !
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க !
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம ளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம் பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் செல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்த சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி
(நூல் நிலைமண்டில ஆசிரியப்பா)


சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக


சுவாமி மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெறறென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்


பழமுதிர்ச்சோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர் ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டகுடகு டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்றெலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க




திருத்தணி

கதிர் வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க



பழனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடியட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்




திருச்செந்தூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாளெனைக் கண்டாற்கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணல்ஏரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
எறிய விஷங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்


திருப்பரங்குன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்


நல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நாவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்


செல்வச் சந்நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாயக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் – சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோரரசே
மயில்நடமிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்


கதிர்காமம்

முற்றிற்று
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

கறந்த பால் மடிதனில் ஏறுவதில்லை
கதிரவனே திசை மாறி உதிப்பதில்லை
இறந்தவரே ஒரு போதும் மீள்வதில்லை
இன்புலக வாழ்வொரு சந்தைக்கூடம்


எங்கள் தலைமகன் மௌதீஸ்
இறப்பென்னும் இயற்கைக்குள் போனான்
எங்களுக்கு இதுவே விதியென்று
ஆகி மனம் தேறி நீ வாழ்வீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

காலத்தினாற் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது
எமது குலவிளக்காய் குன்றாத மாணிக்கமாய் எங்கள்
வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த
**அமரர் பஞ்சாட்சரம் மௌதீஸ்வரன்** அவர்களின்........
இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர், இல்லம்தனில்
வந்தும், தொலைபேசியூடாகவும் அனுதாபம்
தெரிவித்தவர்கள், மலர்வளையம் வைத்தவர்கள், மலரஞ்சலி
செலுத்தியவர்கள், தேவாரம் பாடியவர்கள்,
கிரியைகள்செய்த அந்தணர்கள், தாயை இழந்து வாடிய
வேளையில் அன்னம் அளித்தவர்கள், அந்தியேட்டி
வீட்டுக்கிருத்தியம் போன்ற நிகழ்வுகளில் கலந்து
கொண்டவர்கள், அனைத்து வழிகளிலும், முன்னின்று உதவி
புரிந்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், கண்ணீர்
அஞ்சலி வெளியிட்டோர் மற்றும் இந் நூலை அழகுற
அச்சிட்டுத் தந்த சிவா பதிப்பகத்தினருக்கும், மற்றும்
அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்த
அனைவருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகள்.




அன்புடன்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




✧ அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கையே எடுக்கப்பட்டது
எதை நீ கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

– பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் –





சிவா பதிப்பகம் 077 534 6766

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org